குற்றவியல் நீதித்துறை நடுவர், கூடுதல் மகளிர் நீதிமன்றம், கோயம்புத்தூர்.

முன்னிலை : திருமதி. என். ஷர்மிளா, B.A.,B.L.,
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம், (பொறுப்பு)
கோயம்புத்தூர்.

2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 5 ஆம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவராண்டு 2048, ஹேவிளம்பி, பங்குனி திங்கள் 22 ஆம் நாள்

**ஆண்டுப் பட்டிகை வழக்கு எண். 83/2014**

காவல் ஆய்வாளர்,
அனைத்து மகளிர் காவல் நிலையம், மத்தியப்பகுதி,
கோயம்புத்தூர்.
குற்ற எண்.15/2014 ... குற்றம் முறையிடுபவர்

/எதிர்/

பாண்டி @ பாண்டியன் (33) த/பெ. சேகர் ... எதிரி

இவ்வழக்கானது இறுதி விசாரணைக்காக இன்று 27.03.2018 இந்நீதிமன்றத்தின் முன் வரப்பெற்று, அரசுத்தரப்பில் அரசு குற்றவியல் வழக்கறிஞர் திருமதி. என். மகேஸ்வரி,எம்.ஏ., எம்.எல்., (பொறுப்பு) அவர்களும் எதிரி தரப்பில் திரு.கே. மயில்வாகனன்,பி.ஏ.,பி.எல்., முன்னிலையாகி எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களைக் கேட்டும் ஆவணங்களைப் பரிசீலித்தும் கீழ்க்கண்டவாறு பிறப்பிக்கும் ........

WEB COPY

**தீர்ப்புரை**

1. இந்த வழக்கானது காவல்துறையினர் எதிரிகள் மீது சட்டப் பிரிவு 498(A), 494, 495, 406-IPC ன் கீழ் குற்றம் புரிந்ததாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இவ்வழக்கின் எதிரிக்கும் வாதிக்கும் 13.08.1998 ம் தேதி பழனியில் திருமணம் நடைபெற்றுள்ளதாகவும், திருமணத்திற்கு பின் எதிரி வாதிக்கு சரிவர உணவு கூட தராமல் குடும்பத்தை கவனிக்காமல் ஊதாரியாக சுற்றியுள்ளதாகவும், திருமணத்தின் பயனாக வாதிக்கும் எதிரிக்கும் 15 வயதில் ஒரு பெண் குழந்தை உள்ளதாகவும், இந்நிலையில் கடந்த 2006 ம் ஆண்டு எதிரி, வாதி அணிந்திருந்த 6 பவுன் நகையை வாங்கி சென்றவர் வீட்டிற்கு வராமல் இருந்துள்ளதாகவும் வாதி பல இடங்களில் தேடியும் எதிரியை கண்டுபிடிக்க இயலாமல் கடந்த 14.05.2014 ம் தேதி மருதமலைக்கு வாதி சென்றபோது எதிரி வேறொரு பெண்ணை திருமணம் செய்துள்ளது தெரியவந்துள்ளதாகவும் எனவே எதிரி வாதியை திருமணம் செய்து கொண்டு அவருடன் குடும்பம் நடத்தாமல் மனதளவிலும் உடலளவிலும் கொடுமைப்படுத்திய செயலானது இதச பிரிவு 498(A) படியும் வாதியுடனான திருமணம் சட்டப்பூர்வமாக நடைமுறையில் இருக்கும் போது வேறொரு பெண்ணை திருமணம் செய்த செய்கையானது இதச பிரிவு 494 மற்றும் 495 ன்

படியும் வாதி அணிந்திருந்த நகைகளை வாங்கி திருப்பித் தராமல் இருந்த செய்கையானது இதச பிரிவு 406ன் படியும் தண்டிக்கக்கூடிய குற்றம் புரிந்துள்ளதாக இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிரிகள் இந்நீதிமன்றத்தில் முன்னிலையானவுடன் அவர்களுக்கு அரசுத்தரப்பு ஆவணங்களின் நகல்கள் குவிமுச பிரிவு 207-ன்படி இலவசமாக வழங்கப்பட்டது.

4. எதிரிகளுக்கு போதுமான கால அவகாசம் கொடுக்கப்பட்ட பின்பு வழக்காவணங்களை பரிசீலித்து எதிரி மீது சுமத்தப்பட்ட குற்றத்தை புரிந்திருக்கலாம் என அனுமானிக்க போதுமான காரணங்கள் இருந்ததன் பேரில் எதிரிகள் மீது சட்டப் பிரிவு 498(A), 494, 495, 406-IPCன் கீழ் குற்றச்சாட்டு வனைந்து விளக்கி வினவ, எதிரிகள் தான் குற்றவாளிகள் அல்ல என்றார்கள். எனவே அரசுத்தரப்பு சாட்சி விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. அரசுத்தரப்பில் 1 முதல் 9 வரையிலான சாட்சிகளும், அதசாஆ 1 முதல் 4 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டன. எதிரிகள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்களும் குறியீடு செய்யப்படவில்லை.

WEB COPY

<u>அரசுத்தரப்பு சாட்சிகளின் விசாரணையின் சுருக்கம் பின்வருமாறு:</u>

5. அசா1 ராகினி தன்னுடைய சாட்சியத்தில் தான் 4ஜி மருதக்குட்டி வீதி, ரத்தினபுரியில் குடியிருந்து வருவதாகவும் ஆஜர் எதிரி தன் கணவர் என்றும் கடந்த 13-06-1998ல் தனக்கும் ஆஜர் எதிரிக்கும் திருமணம் நடைபெற்றதாகவும் தாங்கள் இருவரும் விரும்பி திருமணம் நடைபெற்றதாகவும் திருமணம் முடிந்து 6 மாத காலம் கண்ணப்பநகரில் தனியாக குடியிருந்தோம் என்றும் அங்கிருந்த போது தான் கர்ப்பமானதால் தன் மாமியாருடன் சென்று இருக்க தன் வீட்டுக்காரர் அழைத்ததன் பேரில் கணபதியில் தன் மாமியாருடன் சென்று இருந்ததாகவும் தனக்கு குழந்தை பிறக்கும் வரை நன்றாக பார்த்துக்கொண்டார்கள் என்றும் அதன் பின்னிட்டு தனக்கும், தன் கணவருக்கும் அடிக்கடி சிறு சிறு பிரச்சனைகள் இருந்து வந்ததாகவும் தன் கணவர் வேறு யாருடனோ அடிக்கடி பேசிக் கொண்டே இருப்பதாகவும் அதன் பின்னிட்டு அவர் கூறியதன் பேரில் ரத்தினபுரியில் தனியாக குடி போனதாகவும் தனது குழந்தைக்கு 6 வயது இருக்கும் போது தனியாக டிபன் கடை நடத்த பணம் கேட்டதாகவும் தான் தன் தந்தையிடம் வசதி இல்லை என்றதாகவும் தன்னிடம் இருந்த 6 பவுன் நகையை கொடுத்ததாகவும் சிறிது நாட்கள் வீட்டிற்கு வந்து சென்று கொண்டிருந்தவர் எங்கு சென்றார் என்று தெரியவில்லை என்றும் இது குறித்து தன் மாமியாரிடம் சென்று கேட்டதாகவும் அவர் தனக்கு எதிரியின் இருப்பிடம் பற்றி தெரியாது என்று கூறிவிட்டதாகவும் அதன் பிறகு கோவையில் 7ம் நம்பர் ரயில் கேட் அருகே தன் தம்பி ரமணணை அடித்துள்ளதாகவும் அது குறித்து தன் தம்பி தன்னிடம் வந்து சொன்னதாகவும் பிறகு தானும் தன் தம்பியும் அவரை தேடிப் போனதாகவும் அவர் கிடைக்கவில்லை என்றும் அதற்கு பிறகு 14-05-2014ம் தேதி தானும் தன் மகள் ரம்யா, தன் தம்பி ரசிகன் ஆகியோர் மருதமலை

கோயிலுக்கு சென்றிருந்ததாகவும் அங்கு தன் கணவர் வேறு ஒரு பெண்ணிடம் நிற்பதை பார்த்ததாகவும் தன் தம்பி அவரை பின் தொடர்ந்து எங்கிருக்கிறார் என்று தேடி வருவதாக சொன்னார் என்றும் பிறகு 15ம் தேதி தான் வடவள்ளி, ஆலமர பஸ்டாப் அருகே டிபன் கடை வைத்து நடத்தி வருவதை தெரிந்து சென்று கேட்டதாகவும் அங்கு சென்று அவரிடம் கேட்ட போது தன்னை பிடிக்கவில்லை என்றும், தனக்கு பிடித்த பெண்ணுடன் வாழ்ந்து வருகிறேன் என்றும், பார்த்து செல், இல்லாவிட்டால் உன்னை கொன்று விடுவேன் என்று மிரட்டியதாகவும் பிறகு தான் அங்கிருந்து வந்துவிட்டதாகவும் பின் காந்திபுரம் அரசு மகளிர் காவல் நிலையத்தில் சென்று புகார் கொடுத்ததாகவும் தன்னுடைய மகளிடம் சொல்லி அவர் எழுதிக் கொடுத்து தான் கையெழுத்திட்ட புகார் தன்னிடம் காட்டப்படுவது தான் என்றும் அது அதசாஆ 1 அதன் பேரில் போலிசார் தன்னை விசாரித்தாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

6. அசா2 ரசிகன் தன்னுடைய சாட்சியத்தில் தான் ரத்தினபுரியில் மருதக்குட்டி நகரில் இருந்து ரப்பர் மோல்டிங் தொழில் செய்து வருவதாகவும் அசா1 தன் அக்கா என்றும் ஆஜர் எதிரி தன் அக்காவின் கணவர் என்றும் இருவருக்கும் 1998ல் திருமணம் நடைபெற்றதாகவும் திருமணத்திற்கு பிறகு இருவரும் சங்கனூரில் குடியிருந்ததாகவும் திருமணத்திற்கு பிறகு 1999ல் தன் அக்காவுக்கு குழந்தை பிறந்தது என்றும் குழந்தை பிறந்து சில நாட்கள் நன்றாக தான் இருந்ததாகவும் குழந்தையை 1ம் வகுப்பில் சேர்த்த பிறகு அவர் தனியாக தொழில் தொடங்க தன் அப்பாவிடம் பணம் கேட்டுள்ளதாகவும் அதன் பிறகு தன் அக்காவிடம் இருந்த 6 பவுன் நகையை எடுத்து சென்றவர் தான் திரும்பி வரவேயில்லை என்றும் அதன் பிறகு 2014ம் ஆண்டு மருதமலை கோயில் அடிவாரத்தில் எதிரி வேறு ஒரு பெண்ணுடன் இருப்பதை தான், அக்கா மற்றும் அக்கா மகள் பார்த்ததாகவும் பின்பு அவரை பின் தொடர்ந்து வடவள்ளி ஆலமர பஸ்டாப்பில் இருப்பதை பார்த்து வந்து சொன்னதாகவும் அதன் பிறகு 15-06-2014ம் தேதி தன் அக்காவும், அவர் மகளும் மாலை 6 மணிக்கு வடவள்ளி ஆலமர ஸ்டாப்பில் டிபன் கடை சென்று எதிரியை பார்த்துள்ளதாகவும் ஏன் வீட்டிற்கு வரவில்லை என்று விசாரித்த போது எதிரி தனக்கு வேறு ஒரு பெண்ணுடன் திருமணம் ஆகிவிட்டது என்றும் அவரது வாழ்க்கையில் குறுக்கிட வேண்டாம் என்றும் சொன்னதாகவும், கொன்று விடுவேன் என்று கூறியதாகவும் தன் அக்காவும், அவர் மகளும் தன்னிடம் கூறியதாகவும் இது குறித்து காந்திபுரம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும் அவர்கள் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

7. அசா3 ரம்யா தன்னுடைய சாட்சியத்தில் தான் 4ஜி மருதக்குட்டி வீதி, ரத்தினபுரியில் குடியிருந்து 12ம் வகுப்பு படித்து வருவதாகவும் அசா1 தன் அம்மா என்றும், அசா2 தன் மாமா என்றும் ஆஜர் எதிரி தன் அப்பா என்றும் 2006ம் வருடம் தனக்கு சுமார் 7 வயது இருக்கும் என்றும் தனது அம்மாக்கும், அப்பாவுக்கும் அடிக்கடி சண்டை வரும் என்றும் தான் அப்போது சண்டை போட வேண்டாம் என்றெல்லாம் தன் அப்பாவிடம் கூறியுள்ளதாகவும் அப்போது தன் அப்பா தன் அம்மாவை போட்டு அடிப்பார் என்றும் அப்போது தன் அப்பா 2 லட்சம் பணம் வேண்டும் உன்

WEB COPY

தம்பியிடம் சென்று வாங்கி வா என்று அம்மாவிடம் சண்டை போடுவார் என்றும் தன் அம்மா தன் மாமாவிடம் கேட்க கஷ்டப்பட்டு பணம் இல்லை கூறுவார் என்றும் அப்போது தனக்கு தன் மாமா போட்ட செயின் அம்மா நகை சேர்த்து 6 பவுனை தன் அப்பா வாங்கி போய்விட்டதாகவும் பிறகு நகையை வாங்கி சென்றவர் அடிக்கடி தங்களை வந்து பார்ப்பார் என்றும் பின்னர் ஆள் அட்ரசையே காணோம் என்றும் கடந்த 2014 ம் வருடம் மே மாதம் 14 ம் தேதி மருதமலை கோயில் சென்றிருந்தோம் என்றும் தனது அப்பாவும், மற்றொரு பெண்ணுடன் அங்கு நின்று கொண்டிருப்பதை பார்த்ததாகவும் அப்போது தனது மாமா எதிரி பின்பு சென்று வடவள்ளியில் உள்ள நல்லா கவுண்டர் வீதியில் தன் அப்பாவும், மற்றொரு பெண்ணும் குடியிருப்பதை தன் மாமா கண்டு வந்து சொன்னதாகவும் அதற்கு அடுத்த நாள் மாலை சுமார் 6, 6 ½ மணிக்கு தன் அப்பா நடத்தி வரும் டிபன் கடைக்குச் சென்றிருந்ததாகவும் தன் அப்பாவிடம் சென்று ஏன் இங்கு தனியாக நின்று கொண்டிருக்கிறீர்கள் வாங்க என்று அழுததாகவும் அதற்கு தன் அப்பா தனக்கு கல்யாணம் ஆகிவிட்டதாகவும் ஒரு குழந்தை உள்ளது என்றும் அதில் தலையிட்டால் கொன்று விடுவேன் என்று மிரட்டியதாகவும் பிறகு அது பற்றிய விவரங்களை சேகரித்து விட்டு 25-09-2014 ம் தேதி காவல் நிலையம் சென்று தன் அம்மாவின் வாக்கு மூலத்தை தான் எழுத தன் அம்மா கையெழுத்திட்டு புகார் செய்ததாகவும் அதன் பேரில் போலீசார் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

WEB COPY

8. அசா4 ரமணன் தன்னுடைய சாட்சியத்தில் தான் 156, நேரு விதியில் ரத்தினபுரியில் குடியிருந்து ரப்பர் கம்பெனியில் வேலை செய்து வருவதாகவும் ஆஜர் எதிரி தன்னுடைய மாமா என்றும் அசா1 தன் அக்கா என்றும் 1998 ல் ஆஜர் எதிரியை காதலித்து திருமணம் செய்து கொண்டதாகவும் திருமணமாகி குழந்தை பிறந்த 6 மாதம் வரை நன்றாக தான் இருந்தார்கள் என்றும் அதற்கு பின்னிட்டு தன் அக்காவை பணம் கேட்க, காசு இல்லாமல் தானே வந்தாய் என்று தொந்தரவு செய்ததாகவும் தன் அக்காவின் செயினை கடை வைக்க வாங்கிக் கொண்டதாகவும் ஆஜர் எதிரியின் வீட்டில் சாப்பாடு செய்வார்கள் என்றும் ஆனால் தன் அக்காவுக்கு கொடுக்க மாட்டார்கள் என்றும் வீட்டில் வைத்து பூட்டி வைத்து விட்டு சென்று விட்டதாகவும் 2006 ல் தன் அக்கா எங்கள் வீட்டிற்கு வந்து விட்டதாகவும் தன் அக்காவை கூப்பிடுவதற்கு கூட வரவில்லை என்றும் 2006 க்கு பின்னிட்டு ஆஜர் எதிரி எங்கிருந்தார், எங்கு வேலை செய்தார் என்றே தெரியவில்லை என்றும் 2010 ல் ஆஜர் எதிரியை ரத்தினபுரி 7 ம் நம்பர் ரயில்வே கேட்டில் பார்த்தேன் என்றும் வாங்க மாமா வீட்டிற்கு போகலாம் என்று அழைத்ததாகவும் யாருடா உனக்கு மாமா என்று தன்னை அடித்து விட்டதாகவும் அதற்கு பிறகு தான் வீட்டில் போய் சொன்னதாகவும் அதன் பிறகும் ஆஜர் எதிரி காணாமல் போய்விட்டதாகவும் அதன் பிறகு மறுபடியும் 2014 ல் ஆஜர் எதிரியை தன் அண்ணன் ரசிகனும் அக்கா மற்றும் அவரது பெண்ணும் மருதமலையில் பார்த்துள்ளதாகவும் அதன் பிறகு தன் அக்கா காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும் அதன் பின்னிட்டு போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் அவர்கள் விசாரிக்கும் முன்பாக

அக்காவிடம் எதிரி பற்றி விசாரித்தார்கள் என்றும் எதிரி அக்காள், தங்கை இருவரையும் வடவள்ளியில் திருமணம் செய்ததாக தெரிய வந்தது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

9. அசா5 குமாரசாமி தன்னுடைய சாட்சியத்தில் தான் 78, 5வது வீதி, கணபதியில் குடியிருந்து வருவதாகவும் தற்போது 399/7 ஈ.பி. காலணி, குரும்பபாளையத்தில் குடியிருப்பதாகவும் ஆஜர் எதிரியை தனக்குத் தெரியும் என்றும் எதிரியும் எதிரியின் மனைவி ராகினியும், ஆஜர் எதிரியின் அம்மாவும், ஆஜர் எதிரியின் தங்கையும் ஆஜர் எதிரியின் பெண் குழந்தையும் தங்கள் வீட்டில் 12 வருடத்திற்கு முன்பு 3 வருடங்கள் தங்கள் வீட்டில் குடியிருந்து வந்ததாகவும் அதற்கு பிறகு அவர்கள் காலி செய்து விட்டதாகவும் அந்த பெண்ணிற்கும், ஆஜர் எதிரிக்கும் எங்களுக்கும் சம்பந்தம் இல்லை என்றும் சுமார் 1 வருட காலத்திற்கு ராகினியும் போலீசாரும் வந்து பாண்டியன் மறுமணம் செய்து கொண்டதாக தன்னை விசாரித்ததாகவும் போலீசார் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

10. அசா6 ஆரோக்கியசாமி தன்னுடைய சாட்சியத்தில் தான் மேட்டுப்பாளையம் நகராட்சியில் துப்பறவு ஆய்வாளராக பணிபுரிவதாகவும் போலீசார் 2014ம் ஆண்டு தன்னை விசாரணை செய்துள்ளதாகவும் 3-12-2007ம் ஆண்டு தாயார் பெயர் ருக்மணி, தந்தையார் பெயர் பாண்டி மேட்டுப்பாளையம் நகராட்சியில் உள்ள சுபா மருத்துவமனையைச் சார்ந்த மருத்துவமனையில் பிறந்த குழந்தையின் பிறந்த சான்றிதழை கேட்டதாகவும் அதன் பேரில் தான் அளித்த பிறப்பு சான்றிட்ட நகல் தன்னிடம் காட்டப்படும் சான்றிதழ் அதசாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும் போலீசார் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

WEB COPY

11. அசா7 ராணி தன்னுடைய சாட்சியத்தில் தான் காவல் ஆய்வாளராக கரூர் மாவட்டத்தில் பணிபுரிந்து தற்போது விருப்ப ஓய்வு பெற்றுள்ளதாகவும் தான் கடந்த 25-09-2014ம் தேதி கோவை மாநகர மத்தியப் பகுதி மகளிர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது காலை 10.30 மணிக்கு ராகினி க/பெ. பாண்டியன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரைப் பெற்று நிலையக்குற்ற எண் 15/14 சட்டபிரிவு 498ஏ, 494, 406 இதச பிரிவின் கீழ் வழக்குப்பதிவு செய்து மேல் விசாரணைக்காக ஆய்வாளர் பார்வைக்கு வைத்ததாகவும் தான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அதசாஆ3 ஆக குறியீடு செய்யப்படுகிறது என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

12. அசா8 சிவகாமசுந்தரி தன்னுடைய சாட்சியத்தில் தான் வடவள்ளி, கோவையில் குடியிருந்து வருவதாகவும் தான் ஸ்ரீராகவேந்திரா வித்யாலயா மெட்ரிக் உயர்நிலைப்பள்ளியில் தலைமை ஆசிரியர் என்றும் அசா1ஐ தனக்கு தெரியாது என்றும் எதிரி பாண்டியன் என்பவரை தனக்குத் தெரியும் என்றும் எதிரி பாண்டியன் அவர்களின் மகன் பரமேஸ்வரன் எங்கள் பள்ளியில் 4ம் வகுப்பு படித்து வருகிறான் என்றும் ரசிகன் என்பவர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் படி

எங்கள் பள்ளியில் படிக்கும் எதிரி பாண்டியன் என்பவரின் மகனின் பிறந்த தேதியும் அவரது அம்மா பெயரும் கேட்டு மனு போட்டிருந்தார் என்றும் எங்கள் பள்ளியில் உள்ள ஆவணங்களின் படி எதிரி பாண்டியன் என்பவரின் மகன் பிறந்த தேதி 3.12.2007, அவரது அம்மா பெயர் ருக்மணி. தங்களது பள்ளிக்கு வந்த தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் மனுவும் அதற்கு தாங்கள் அளித்த பதிலும் தான் தாக்கல் செய்கிறேன் என்றும் அது அதசாஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது (4 வரிசைகள்) என்றும் எதிரி தரப்பில் மனுவில் மனுவை அசா8 தாக்கல் செய்ய இயலாது என்றும் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கையெழுத்து இல்லை என்று ஆட்சேபணை செய்யப்பட்டது என்றும் ஆட்சேபணையின் பேரில் அதசாஆ 4 குறியீடு செய்யப்படுகிறது என்றும் இது சம்பந்தமாக போலீசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

13. அசா 9 ராஜேஸ்வரி தன்னுடைய சாட்சியத்தில் தான் தற்போது கோவை மாநகரம் நில அபகரிப்பு தடுப்பு சிறப்புப் பிரிவில் ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும் தான் கடந்த 25.9.2014 ம் தேதி கோவை மாநகரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் மத்தியப் பகுதியில் ஆய்வாளராக பணியாற்றியபோது உதவி ஆய்வாளர் திருமதி.ராணி அவர்கள் நி.கு.எண்.15/2014 வழக்கினை பதிவு செய்து தனது புலன் விசாரணை கோப்பினை அன்றைய தினம் பெற்றுக்கொண்டு சம்பவ இடம் சென்று சாட்சிகள் வாதி ராகினி, ரசிகன் ஆகியோர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் வாதி எதிரிக்கு 2 வது மனைவியின் மூலம் பிறந்த குழந்தையின் பிறப்புச் சான்று, பள்ளி சான்று நகலையும் ஆஜர்படுத்தியதாகவும் எதிரியை கண்டுபிடிக்கவேண்டிய தகவல் வைக்கப்பட்டுள்ளதாகவும் 01.04.2014 ம் தேதி சாட்சிகள் மருதக்குட்டி கவுண்டர், ஆறுமுகம், வீராசாமி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும் அன்றைய தினம் வாதி அடையாளம் காட்ட எதிரியை அவரது வீடான வடவள்ளி, நல்லாகவுண்டர் வீதி, க.எண்.21 ஏ, என்ற முகவரியில் வீட்டின் முன்பு வைத்து மாலை 16 மணிக்கு கைது செய்து 17.15 மணிக்கு நிலையம் வந்து எதிரியை முறைப்படி தக்க காவலில் வைத்து நீதிமன்றம் காவலுக்கு அனுப்பியதாகவும் 7.10.2014 ம் தேதி சாட்சிகள் இந்திரா, ரம்யா, ரமணன், குமாரசாமி, பாக்கியம் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றும் எதிரியின் 2 ம் மனைவியின் மூலம் பிறந்த குழந்தைக்கு பிறப்புச் சான்று வழங்கிய மேட்டுப்பாளையம் சுகாதார ஆய்வாளர் ஆரோக்கியசாமி மற்றும் பள்ளிச் சான்று வழங்கி வடவள்ளி ஸ்ரீராகவேந்திரா வித்யாலயா மெட்ரிக் பள்ளி தலைமை ஆசிரியை திருமதி. சிவகாமசுந்தரி ஆகியோரிடம் 11.11.2014 ம் தேதி விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் 12.11.2014 ம் தேதி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த உதவியாளர் திருமதி. ராணியை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்ததாகவும் இவ்வழக்கின் புலன்விசாரணை முடித்து 21.11.2014 ம் தேதி APP அவர்களிடம் கருத்துரை பெற்று எதிரி மீது ச.பி. 498 எ, 494, 495, 406 இதச படி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்ததாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

WEB COPY

14. சாட்சியங்களிலிருந்து எதிரிகளுக்கு பாதகமான சங்கதிகளை தொகுத்து குவிமுச பிரிவு 313(1)(ஆ) படி வனைந்து வினவியபொழுது எதிரிகள் அந்த சாட்சியங்கள் பொய் என்றும் பொய்யான வழக்கு என்றும் தமது தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும் எடுத்துரைத்தார்கள்.

15. இவ்வழக்கினில் முடிவு செய்யப்பட வேண்டிய சங்கதி யாதெனில், அரசுத்தரப்பில் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டினை நிரூபிக்கப்பட்டுள்ளதா இல்லையா? என்பதேயாகும்.

**கலந்தாராய்தல் மற்றும் தீர்வு**

16. இவ்வழக்கின் எதிரிக்கும் வாதிக்கும் 13.08.1998ம் தேதி பழனியில் திருமணம் நடைபெற்றுள்ளதாகவும், திருமணத்திற்கு பின் எதிரி வாதிக்கு சரிவர உணவு கூட தராமல் குடும்பத்தை கவனிக்காமல் ஊதாரியாக சுற்றியுள்ளதாகவும், திருமணத்தின் பயனாக வாதிக்கும் எதிரிக்கும் 15 வயதில் ஒரு பெண் குழந்தை உள்ளதாகவும், இந்நிலையில் கடந்த 2006ம் ஆண்டு எதிரி, வாதி அணிந்திருந்த 6 பவுன் நகையை வாங்கிச் சென்றவர் வீட்டிற்கு வராமல் இருந்துள்ளதாகவும் வாதி பல இடங்களில் தேடியும் எதிரியை கண்டுபிடிக்க இயலாமல் கடந்த 14.05.2014ம் தேதி மருதமலைக்கு வாதி சென்றபோது எதிரி வேறொரு பெண்ணை திருமணம் செய்துள்ளதாகவும் அரசுத் தரப்பில் வழக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

WEB COPY

17. அரசுத் தரப்பில் புகார்தாரர் அசா1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அசா1 புகார் மற்றும் சாட்சியத்தில் எதிரிக்கும் தனக்கும் 13.06.1998ம் ஆண்டு பழனி மலை அடிவாரத்தில் உள்ள திருவாவின்குடி கோவிலில் வைத்து காதல் திருமணம் நடைபெற்றதாகவும், பழனி சார்பதிவாளர் அலுவலகத்தில் திருமணத்தை பதிவு செய்ததாகவும் 09.05.1999ல் எதிரிக்கும் அசா1க்கும் பெண் குழந்தை பிறந்ததாகவும் சொல்லியுள்ளார். அரசுத் தரப்பில் விசாரிக்கப்பட்ட அசா2, அசா4 சாட்சிகள் தங்களுடைய சாட்சியங்களில் எதிரிக்கும் அசா1க்கும் 1998ம் ஆண்டு திருமணம் நடந்ததாக சாட்சியம் அளித்துள்ளனர். அசா3 ஆக அசா1 மற்றும் எதிரிக்கு பிறந்த பெண் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். அவரது சாட்சியத்திலிருந்தும் எதிரிக்கும் அசா1க்கும் திருமணம் நடைபெற்றுள்ளது என்பதை அறிய முடிகிறது.

18. இந்நிலையில் அரசுத் தரப்பில் விசாரிக்கப்பட்ட அசா5 தன்னுடைய சாட்சியத்தில் எதிரியும் அசா1ம் எதிரியின் அம்மா மற்றும் தங்கையும் மற்றும் எதிரியின் பெண் குழந்தையும் தங்கள் வீட்டில் 12 வருடத்திற்கு முன்பு 3 வருடங்கள் குடியிருந்து வந்ததாக சாட்சியம் அளித்துள்ளார். எனவே அசா5ன் சாட்சியத்திலிருந்தும் அசா1ம் எதிரியும் திருமணம் செய்து கொண்டு கூட்டுக் குடும்பமாகவும் குடியிருந்து வந்துள்ளனர் என்பதை அறிய முடிகிறது. மேற்கண்ட பரிசீலனைகளின்படி அசா1 முதல் அசா5 வரையிலான சாட்சியங்களிலிருந்து

எதிரிக்கும் அசா1 க்கும் 13.06.1998 ம் ஆண்டு திருமணம் நடைபெற்றுள்ளது என்றும் அந்தத் திருமணத்தின் பயனாக இருவருக்கும் அசா3 பிறந்துள்ளார் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

19. மேலும் எதிரி தரப்பில் அசா1 ஐ குறுக்கு விசாரணை செய்யும் போது "எதிரியும் நானும் காதலித்து திருமணம் செய்து கொண்டோம் என்றால் சரிதான். திருமண சமயத்தில் என் தாயார் திருமணத்திற்கு வந்துள்ளார். கோவையில் நடந்த பழனியில் எதற்கு பதிவு செய்தோம் என்றால் என் தம்பி தான் பதிவு செய்யவேண்டும் என்று பழனியில் பதிவு செய்தோம். திருமண சமயத்திலும், அதற்கு முன்பும் நானும், எதிரியும் கோவையில் தான் இருந்தோம் என்றால் சரிதான். எந்த ஒரு சமயத்திலும் பழனியில் குடியிருக்கவில்லை என்றால் சரிதான்" என்று அசா1 டம் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது. எதிரி தரப்பு குறுக்கு விசாரணையிலிருந்தே எதிரிக்கும் அசா1 க்கும் திருமணம் நடைபெற்றுள்ளது என்பதை எதிரி தரப்பில் மறுக்கவில்லை என்பதை அறிய முடிகிறது.

20. எதிரி மற்றும் அவரது தாயார் மற்றும் அவரது தங்கை வள்ளியுடன் அசா1, 153, சண்முகக் கவுண்டர் நகர், சங்கனூர் ரோடு, கோவையில் குடும்பம் நடத்தி வந்தபோது எதிரி தனக்கு சரியான சாப்பாடு கூட தரவில்லை என்றும் தினமும் தன்னிடம் பிரச்சனை செய்துவந்ததாகவும் அடிக்கடி தன்னை என்ன கொண்டு வந்தாய் என்று ரகளை செய்ததாகவும், அடிக்கடி யாருடனோ எதிரி செல் போனில் பேசி வந்ததாகவும் அசா1 கேட்டால் திட்டி அடித்ததாகவும் அசா1 புகாரில் சொல்லியுள்ளார். நீதிமன்ற சாட்சியத்திலும் தன் கணவருக்கும் தனக்கும் அடிக்கடி சிறு சிறு பிரச்சனைகள் இருந்து வந்தது. வேறு யாருடனோ போனில் பேசிக் கொண்டிருப்பார் என்று சாட்சியம் அளித்துள்ளார். இந்நிலையில் அசா3 ஆன எதிரியின் குழந்தை தன்னுடைய சாட்சியத்தில் தனது அம்மாக்கும், அப்பாக்கும் அடிக்கடி சண்டை வரும் என்றும் அப்போது தன் அப்பா தன் அம்மாவைப் போட்டு அடிப்பார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். இந்த வழக்கில் அசா1 ம் எதிரியும் குடும்பம் நடத்தி வந்த காலத்தில் அவர்களுக்குள் இருந்து வந்த பிரச்சனை குறித்து சாட்சியம் அளித்த அசா1 மற்றும் 3 ன் சாட்சியமே நேரடி சாட்சியம் ஆகும். அசா1 மற்றும் 3 ன் சாட்சியத்திலிருந்து எதிரி செல் போனில் யாருடனோ பேசிக்கொண்டு அசா1 ஐ மனதளவிலும், உடலளவிலும் துன்புறுத்தி வந்துள்ளார் என்பதை அரசுத் தரப்பில் நிரூபித்துள்ளதாக இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

WEB COPY

21. 2006 ம் ஆண்டு டிசம்பர் மாதம் தன்னிடம் டிபன் கடை வைத்து நடத்த பணம் வேண்டும் என்று கேட்டு தன்னுடைய 6 பவுன் நகையை எதிரி வாங்கிச் சென்றுவிட்டு திரும்பி வீட்டிற்கு வரவேயில்லை என்றும் மாமியாரைக் கேட்டாலும் தெரியாது என்று கூறிவிட்டதாகவும் அசா1 ம் அவரது தம்பியும் சேர்ந்து பல ஊர்களில் தேடிப் பார்த்தும் தன் கணவரைப் பற்றி எந்தத்

தகவலும் கிடைக்கவில்லை என்று அசா1 புகாரில் சொல்லியுள்ளார். நீதிமன்ற சாட்சியத்திலும் அசா1 தனது குழந்தைக்கு 6 வயது இருக்கும் போது தனியாக டிபன் கடை வைத்து நடத்த எதிரி பணம் கேட்டதாகவும் தன்னிடம் இருந்த 6 பவுன் நகையை கொடுத்ததாகவும் அசா1 சாட்சியத்தில் சொல்லியுள்ளார். அசா1 ன் 6 பவுன் நகையை எதிரி வாங்கிச் சென்றதாக அசா1 புகாரிலும் சாட்சியத்திலும் தெளிவாக சாட்சியம் அளித்துள்ளார். குறுக்கு விசாரணையிலும் அவரது சாட்சியத்தினை நிலை நிறுத்தியுள்ளார்.

22. அசா1 ஐப் போன்றே அரசுத் தரப்பில் விசாரிக்கப்பட்ட அசா2 ஆன அசா1 ன் சகோதரரும் தன்னுடைய சாட்சியத்தில் அசா1 ன் குழந்தையை 1 ம் வகுப்பில் சேர்த்த பிறகு எதிரி தனியாக தொழில் தொடங்க பணம் கேட்டதாகவும் அதன் பிறகு தன் அக்காவிடமிருந்த 6 பவுன் நகையை எதிரி எடுத்துச் சென்றதாக சாட்சியம் அளித்துள்ளார். அசா2 ன் சாட்சியத்திலிருந்தும் அசா1 ன் 6 பவுன் நகையை எதிரி வாங்கிச் சென்றுள்ளார் என்பதை அறிய முடிகிறது. அசா1 ன் சாட்சியத்தினை அசா2 ன் சாட்சியம் உறுதி செய்துள்ளது.

23. அசா3 ஆக விசாரிக்கப்பட்டுள்ள அசா1 ன் குழந்தை தன்னுடைய சாட்சியத்தில் "எனது அம்மாக்கும், அப்பாக்கும் அடிக்கடி சண்டை வரும். நான் அப்போது சண்டை போட வேண்டாம் என்றெல்லாம் என் அப்பாவிடம் கூறியுள்ளேன். அப்போது என் அப்பா என் அம்மாவை போட்டு அடிப்பார். அப்போது என் அப்பா 2 லட்சம் பணம் வேண்டும் உன் தம்பியிடம் சென்று வாங்கி வா என்று அம்மாவிடம் சண்டை போடுவார். என் அம்மா என் மாமாவிடம் கேட்க கஷ்டப்பட்டு பணம் இல்லை என்று கூறுவார். அப்போது எனக்கு என் மாமா போட்ட செயின், அம்மா நகை சேர்த்து 6 பவுனை என் அப்பா வாங்கி போய்விட்டார்" என்று சாட்சியம் அளித்துள்ளார். இந்த வழக்கில் மேற்கண்ட அசா3 ன் சாட்சியம் நேரடி சாட்சியம் ஆகும். எதிரியும் அசா1 ம் வாழ்ந்து வந்த காலத்தில் அவர்களுடன் இருந்து வந்த அசா3 தன்னுடைய சாட்சியத்தில் எதிரி அசா1 டம் 6 பவுன் நகையை வாங்கிச் சென்றுள்ளதாக சாட்சியம் அளித்துள்ளது அரசுத் தரப்பு வழக்கான எதிரி வாதி அணிந்திருந்த 6 பவுன் நகையை வாங்கிச் சென்றுள்ளார் என்ற கூற்றினை நிரூபிக்க போதுமான சாட்சியமாக இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே மேற்கண்ட அசா1 முதல் 3 வரையிலான சாட்சியங்களிலிருந்து அசா1 ன் 6 பவுன் நகையை எதிரி வாங்கிச் சென்று திருப்பித் தரவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

24. அசா1 புகாரில் "கடந்த 2010 ம் ஆண்டு தனது தம்பி ரமணன் எதிரியை இரத்தினபுரி 7 ஆம் நம்பர் ரயில்வே கேட் அருகே பார்த்து பேசிய போது எதிரி தனது தம்பியை ஓங்கி அறைந்து விட்டு வேகமாக போய்விட்டதாகவும் அதன் பின் மேலும் கோவையில் தேடிப்பார்த்து எதிரியைக் குறித்து எந்த தகவலும் கிடைக்கவில்லை என்றும் 14.5.2014 ம் ஆண்டு தன் மகள் மற்றும் தன் தம்பி ரசிகனுடன் மருதமலை கோயிலுக்குச் சென்றபோது அங்கு தன் கணவரை வேறு

WEB COPY

பெண்ணுடன் பார்த்ததாகவும் அவரை தொடர்ந்து சென்றபோது எதிரி 11/21, நல்ல கவுண்டர் வீதி வடவள்ளி என்ற முகவரியில் ருக்மணி என்ற பெண்ணுடன் அந்த பெண்ணை 2 வது திருமணம் செய்து குழந்தையுடன் குடும்பம் நடத்தி வருவது தெரியவந்ததாகவும் 19.5.2014 ம் ஆண்டு வடவள்ளி ஆலமார பேருந்து நிறுத்தத்தில் தன் கணவரை டிபன் கடை தள்ளுவண்டியில் வைத்திருப்பதைப் பார்த்து தானும் தன் மகளும் எதிரியிடம் சென்று விசாரித்த போது அவர் தன் வாழ்க்கையில் நீ தலையிடவேண்டாம் என் விருப்பப்படி திருமணம் செய்தேன் என்று சொல்லியதாக" சொல்லியுள்ளார்.

25. அரசுத் தரப்பில் விசாரிக்கப்பட்ட அசா1 தன்னுடைய சாட்சியத்தில் "சிறிது நாட்கள் வீட்டிற்கு வந்து சென்று கொண்டிருந்தவர் எங்கு சென்றார் என்று தெரியவில்லை. இது குறித்து என் மாமியாரிடம் சென்று கேட்டேன். அவர் தனக்கு எதிரியின் இருப்பிடம் பற்றி தெரியாது என்றும் கூறிவிட்டார். அதன் பிறகு கோவை 7 ம் நம்பர் ரயில் கேட் அருகே என் தம்பி ரமணணை அடித்துள்ளார். அது குறித்து என் தம்பி என்னிடம் வந்து சொன்னார். பிறகு நானும் என் தம்பியும் அவரை தேடிப் போனோம் அவர் கிடைக்கவில்லை. அதற்கு பிறகு 14-05-2014 ம் தேதி நானும் என் மகள் ரம்யா, என் தம்பி ரசிகன் ஆகியோர் மருதமலை கோயிலுக்கு சென்றிருந்தோம். அங்கு என் கணவர் வேறு ஒரு பெண்ணிடம் நிற்பதை பார்த்தோம். என் தம்பி அவரை பின் தொடர்ந்து எங்கிருக்கிறார் என்று தேடி வருவதாக சொன்னார். பிறகு 15 ம் தேதி நான் வடவள்ளி, ஆலமர பஸ்டாப் அருகே டிபன் கடை வைத்து நடத்தி வருவதை தெரிந்து சென்று கேட்டேன். அங்கு சென்று அவரிடம் கேட்ட போது தன்னை பிடிக்கவில்லை என்றும், தனக்கு பிடித்த பெண்ணுடன் வாழ்ந்து வருகிறேன் என்றும், பார்த்து செல், இல்லாவிட்டால் உன்னை கொன்று விடுவேன் என்று மிரட்டினார். பிறகு நான் அங்கிருந்து வந்துவிட்டேன்" என்று சாட்சியம் அளித்துள்ளார்.

WEB COPY

26. அசா1 ஐப் போன்றே அசா2 ம் தன்னுடைய சாட்சியத்தில் "அதன் பிறகு 2014 ம் ஆண்டு மருதமலை கோயில் அடிவாரத்தில் எதிரி வேறு ஒரு பெண்ணுடன் இருப்பதை நான், அக்கா மற்றும் அக்கா மகள் பார்த்தோம். பின்பு அவரை பின் தொடர்ந்து வடவள்ளி ஆலமர பஸ்டாப்பில் இருப்பதை பார்த்து வந்து சொன்னேன். அதன் பிறகு 15-06-2014 ம் தேதி தன் அக்காவும், அவர் மகளும் மாலை 6 மணிக்கு வடவள்ளி ஆலமர ஸ்டாப்பில் டிபன் கடை சென்று எதிரியை பார்த்துள்ளார்கள். ஏன் வீட்டிற்கு வரவில்லை என்று விசாரித்த போது எதிரி தனக்கு வேறு ஒரு பெண்ணுடன் திருமணம் ஆகிவிட்டது என்றும், அவரது வாழ்க்கையில் குறுக்கிட வேண்டாம் என்றும் சொன்னதாகவும், கொன்று விடுவேன் என்று கூறியதாகவும் என் அக்காவும், அவர் மகளும் என்னிடம் கூறினார்கள்" என்று சாட்சியம் அளித்துள்ளார். எதிரி வேறு பெண்ணை திருமணம் செய்து கொண்டு குழந்தை பெற்றுக் கொண்டு வாழ்ந்து வந்துள்ளார் என்ற அசா1 ன் சாட்சியம் மற்றும் புகாரினை உறுதி செய்யும் விதத்தில் அசா2 ன் சாட்சியம் உள்ளது.

27. அசா1, 2 ஐப் போன்று அசா3 ன் சாட்சியம் தன்னுடைய சாட்சியத்தில் "கடந்த 2014 ம் வருடம் மே மாதம் 14 ம் தேதி மருதமலை கோயில் சென்றிருந்தோம். எனது அப்பாவும், மற்றொரு பெண்ணுடன் அங்கு நின்று கொண்டிருப்பதை பார்த்தோம். அப்போது எனது மாமா எதிரி பின்பு சென்று வடவள்ளியில் உள்ள நல்லா கவுண்டர் வீதியில் என் அப்பாவும், மற்றொரு பெண்ணும் குடியிருப்பதை தன் மாமா கண்டு வந்து சொன்னார். அதற்கு அடுத்த நாள் மாலை சுமார் 6, 6 ½ மணிக்கு என் அப்பா நடத்தி வரும் டிபன் கடைக்குச் சென்றோம். என் அப்பாவிடம் சென்று ஏன் இங்கு தனியாக நின்று கொண்டிருக்கிறீர்கள் வாங்க என்று அழுதார். அதற்கு என் அப்பா எனக்கு கல்யாணம் ஆகிவிட்டது. ஒரு குழந்தை உள்ளது என்றார். அதில் தலையிட்டால் கொன்று விடுவேன் என்று மிரட்டினார்" என்று சாட்சியம் அளித்துள்ளார். எனவே அசா3 ன் சாட்சியத்திலிருந்தும் எதிரி அசா1 ஐயும், அசா3 ஐயும் விட்டுச் சென்று வேறு பெண்ணை திருமணம் செய்து அவர்களுக்குள் ஒரு குழந்தையும் பிறந்து அசா1 ஐயும், அசா3 ஐயும் நிராகரித்துள்ளார் என்பதை அறிய முடிகிறது.

28. அசா1 முதல் 3 ஐப் போன்றே அசா4 ம் தன்னுடைய சாட்சியத்தில் "2006 க்கு பின்னிட்டு ஆஜர் எதிரி எங்கிருந்தார், எங்கு வேலை செய்தார் என்றே தெரியவில்லை. 2010 ல் ஆஜர் எதிரியை ரத்தினபுரி 7 ம் நம்பர் ரயில்வே கேட்டில் பார்த்தேன். வாங்க மாமா வீட்டிற்கு போகலாம் என்று அழைத்தேன். யாருடா உனக்கு மாமா என்று என்னை அடித்து விட்டார். அதற்கு பிறகு நான் வீட்டில் போய் சொன்னேன். அதன் பிறகும் ஆஜர் எதிரி காணாமல் போய்விட்டார். அதன் பிறகு மறுபடியும் 2014 ல் ஆஜர் எதிரியை தன் அண்ணன் ரசிகனும் அக்கா மற்றும் அவரது பெண்ணும் மருதமலையில் பார்த்துள்ளார்கள்" என்று சாட்சியம் அளித்துள்ளார். எனவே அசா1 முதல் அசா4 வரையிலான சாட்சியங்களிலிருந்து எதிரி அசா1 ஐயும், அசா3 ஐயும் விட்டுவிட்டு வேறு பெண்ணை திருமணம் செய்துகொண்டு குழந்தை பெற்றுக்கொண்டு வாழ்ந்து வந்துள்ளார் என்பதை அறிய முடிகிறது.

WEB COPY

29. இந்நிலையில் அரசுத் தரப்பில் விசாரிக்கப்பட்ட அசா6 தன்னுடைய சாட்சியத்தில் 3-12-2007 ம் ஆண்டு தாயார் பெயர் ருக்மணி, தந்தையார் பெயர் பாண்டி ஆகியோருக்கு மேட்டுப்பாளையம் நகராட்சியில் உள்ள சுபா மருத்துவமனையில் பிறந்த குழந்தையின் பிறப்புச் சான்றிதழ் வழங்கியதாக சாட்சியம் அளித்துள்ளார். அந்த பிறப்புச் சான்றிதழ் அரசுத் தரப்பில் அதசாஆ 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதசாஆ 2 பிறப்புச் சான்றிதழை ஆராய்கையில் எதிரிக்கும் ஒரு ருக்மணி என்பவருக்கும் 3.12.2007 ம் ஆண்டு பி.ஆர். பரமேஸ்வரன் என்ற ஆண் குழந்தை பிறந்துள்ளது என்பதை அறிய முடிகிறது.

30. மேலும் அரசுத் தரப்பில் அசா8 ஆக விசாரிக்கப்பட்டுள்ள வித்யாலாயா மெட்ரிக் உயர்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் தன்னுடைய சாட்சியத்தில் "அசா1 ஐ தனக்கு

தெரியாது என்றும் எதிரி பாண்டியன் என்பவரை தனக்குத் தெரியும் என்றும் எதிரி பாண்டியன் அவர்களின் மகன் பரமேஸ்வரன் எங்கள் பள்ளியில் 4ம் வகுப்பு படித்து வருகிறான் என்றும் ரசிகன் என்பவர் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் படி எங்கள் பள்ளியில் படிக்கும் எதிரி பாண்டியன் என்பவரின் மகனின் பிறந்த தேதியும் அவரது அம்மா பெயரும் கேட்டு மனு போட்டிருந்தார் என்றும் எங்கள் பள்ளியில் உள்ள ஆவணங்களின் படி எதிரி பாண்டியன் என்பவரின் மகன் பிறந்த தேதி 3.12.2007, அவரது அம்மா பெயர் ருக்மணி" என்று சாட்சியம் அளித்துள்ளார். அசா8ன் பள்ளிக்கு அனுப்பப்பட்ட தகவல் அறியும் உரிமைச் சட்ட மனுவும், பதிலும் அதசாஆ 4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

31. அதசாஆ 4 ஆவணத்தினை பரிசீலனை செய்கையில் ஸ்ரீராகவேந்திரா மெட்ரிக் பள்ளியில் படித்து வரும் பரமேஸ்வரன் என்ற மாணவர் எதிரி மற்றும் ருக்மணி என்பவரது மகன் என்பதை அறிய முடிகிறது. மேற்கண்ட அரசுத் தரப்பில் விசாரிக்கப்பட்ட அசா1 முதல் அசா4, 8 வரையிலான சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும் அதசாஆ 2, அதசாஆ 4 ஆவணங்களிலிருந்தும் எதிரி ருக்மணி என்ற பெண்ணை அசா1 உடனான திருமணம் சட்டப்பூர்வமாக நடைமுறையில் இருக்கும் போது இரண்டாவது திருமணம் செய்துகொண்டுள்ளார் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

WEB COPY

32. இந்த வழக்கில் எதிரி 2வது திருமணம் செய்துகொண்ட ருக்மணி என்ற பெண் எதிரியாகவோ, சாட்சியாகவோ சேர்க்கப்படவில்லை. எதிரி தனது முதல் திருமணத்தை இரண்டாவதாக திருமணம் செய்துகொண்ட ருக்மணியிடமிருந்து மறைத்து திருமணம் செய்துகொண்டாரா என்பதைக் குறித்து அரசுத் தரப்பு நிரூபிக்க தவறிவிட்டது. அதற்கான சாட்சியங்களோ அல்லது ஆவண சாட்சியங்களோ இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டு அரசுத் தரப்பு குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை.

33. மேற்கண்ட பரிசீலனைகளின் படி எதிரி செல்போனில் பேசிக்கொண்டு வாதியிடம் சண்டையிட்டு 2வது திருமணம் செய்து கொண்டு அசா1ஐ மனதளவிலும், உடலளவிலும் கொடுமைப்படுத்தியுள்ளார் என்றும் அசா1 உயிருடன் இருக்கும் போதே விவாகரத்து பெறாமல் 2வது திருமணம் செய்துகொண்டார் என்றும் அசா1ன் 6 பவுன் நகையை வாங்கிச் சென்றுவிட்டு திருப்பித் தரவில்லை என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

34. எனவே அசா1ஐ எதிரி மனதளவிலும், உடலளவிலும் கொடுமைப்படுத்திய குற்றத்திற்காக 498(A)-ன் கீழும், அசா1ன் 6 பவுன் நகையை வாங்கிக் கொண்டு திருப்பித் தராத குற்றத்திற்காக 406-ன் கீழும், அசா1டம் விவாகரத்து பெறாமல் 2வது திருமணம் செய்த குற்றத்திற்காக இதச 494-ன் கீழும் தண்டிக்கத்தக்கவர் என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

35. எனவே எதிரி 2வது திருமணம் செய்து கொண்ட ருக்மணி என்பவரிடம் முதல் திருமணத்தை மறைத்து திருமணம் செய்துகொண்டாரா என்பதை அரசுத் தரப்பு நிரூபிக்காத காரணத்தினால் இதச பிரிவு 495-ன் கீழ் குற்றவாளி அல்ல என்று முடிவு செய்து கு.வி.மு.ச. பிரிவு 248(1)ன் கீழ் இந்நீதிமன்றம் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.

36. எனவே எதிரிக்கு எதிராக இதச 498(A), 406, 494-ன் பிரிவின் கீழான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதால் எதிரி குற்றவாளி என முடிவு செய்து எதிரிக்கு வழங்கப்படவிருக்கும் தண்டனை பற்றி 248(2) Cr.PC படி கேட்கப்பட்டது.

எதிரி

**37. இறுதியாக இவ்வழக்கின் தன்மை எதிரியின் வயது, வாழ்க்கை நிலை, குடும்பச் சூழ்நிலை ஆகியவற்றை கருத்தில் கொண்டு எதிரியின் மீதான இதச 498(A) பிரிவின் கீழான குற்றத்திற்கு எதிரிக்கு பிரிவு 248(2) குவிமுச படி 1 வருடம் கடுங்காவல் சிறைதண்டனை விதித்தும் மற்றும் ரூ.2,000/- அபராதம் விதித்தும், கட்டத் தவறினால் 2 மாதம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும் மேலும் எதிரியின் மீதான இதச 406-பிரிவின் கீழான குற்றத்திற்கு எதிரிக்கு பிரிவு 248(2) குவிமுச படி 1 வருடம் கடுங்காவல் சிறைதண்டனை விதித்தும் மேலும் எதிரியின் மீதான இதச 494-பிரிவின் கீழான குற்றத்திற்கு எதிரிக்கு பிரிவு 248(2) குவிமுச படி 2 வருடம் கடுங்காவல் சிறைதண்டனை விதித்தும் மற்றும் ரூ.3,000/- அபராதம் விதித்தும், கட்டத் தவறினால் 2 மாதம் மெய்க்காவல் சிறை தண்டனை விதித்தும் தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரி சிறையில் இருந்த நாட்களான 01.10.2014 முதல் 16.10.2014 வரையிலான 16 நாட்களை குவிமுச 428 பிரிவின் கீழ் தண்டனை காலத்தில் இருந்து கழித்துக் கொள்ள உத்தரவிடப்படுகிறது. எதிரி மேற்படி தண்டனை காலங்களை ஏக காலங்களில் அனுபவிக்கவும் உத்தரவிடப்படுகிறது.**

38. இவ்வழக்கில் சொத்துக்கள் ஏதுவும் இல்லை.

இத்தீர்ப்புரையானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு, 05.04.2018 அன்று அவையறியப் பகரப்பட்டது.

(ஒம்) என். ஷர்மிளா

நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம் (பொறுப்பு),
கோயம்புத்தூர்.

WEB COPY

**<u>இணைப்புகள்:</u>**

**<u>அரசுத்தரப்பு சாட்சிகள்:</u>**

அசா.1 - திருமதி. ராகினி
அசா.2 - திரு. ரசிகன்
அசா.3 - ரம்யா
அசா.4 - திரு. ரமணன்
அசா.5 - திரு. குமாரசாமி
அசா.6 - திரு. ஆரோக்கியசாமி
அசா.7 - திருமதி. ராணி, காவல் ஆய்வாளர் (ஓய்வு)
அசா.8 - திருமதி. சிவகாமசுந்தரி, தலைமை ஆசிரியர்
அசா.9 - திருமதி.ராஜேஸ்வரி, காவல் ஆய்வாளர்

**<u>அரசுத்தரப்பு சான்றாவணங்கள்:</u>**

அ.த.சா.ஆ.1 புகார் மனு
அ.த.சா.ஆ.2 பிறப்பு சான்றிதழ்
அ.த.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை
அ.த.சா.ஆ.4 தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரப்பட்ட மனுவும் மற்றும் பதிலும் (4 வரிசைகள்)

**<u>அரசுத்தரப்பு சான்றுபொருள்:</u>** இல்லை

**<u>நீதிமன்ற சான்றாவணங்கள்</u>:** இல்லை

**<u>எதிரிகள் தரப்பு சாட்சிகள்</u>:** இல்லை

**<u>எதிரிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>:** இல்லை

WEB COPY

(ஒம்) என். ஷர்மிளா
நீதித்துறை நடுவர்,
கூடுதல் மகளிர் நீதிமன்றம் (பொறுப்பு),
கோயம்புத்தூர்.

**<u>குறிப்பு</u>**

1. இவ்வழக்கு விசாரணையின் போது எதிரிகள் பிணையில் இருந்தார்கள்.
2. இவ்வழக்கின் எதிரிகள் சட்டப்பிரிவு சட்டப் பிரிவு 498(A), 494, 406-இதச பிரிவின் கீழ் குற்றவாளி என்று முடிவு செய்ததால் எதிரிக்கு கடுங்காவல் தண்டனையும், அபராதமும் விதிக்கப்பட்டது. அபராதத்தை கட்டிவிட்டார்கள்.
3. இவ்வழக்கின் முடிவு காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.
4. இவ்வழக்கில் சொத்துக்கள் ஏதுவும் இல்லை.
5. Sentence of accused suspended and released on bail till 04-05-2018 as per order CMP No. 577 /2018 dated 05.04.2018.

/உண்மை நகல்/